**வன விலங்குகள் பாதுகாப்பு நிதியம் - 2021**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வன விலங்குகள் பாதுகாப்பு நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பெறுவனவு கொடுப்பனவு கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 22 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யாதிருக்கும் போது நிதிஏற்பாடு இனங்காண முடியாதிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 46 டெக்ஸ்டொப் கணணிகளைக் கொள்வனவு | வன விலங்கு பாதுகாப்பு நிதியத்தின் கணக்குகள் அட்டுறு எண்ணக்கருவின் பிரகாரம் கணக்கு வைக்கப்படுகின்றமையால் டெக்ஸ்டொப் கணணிகளை கொள்வனவு செய்யும் உடன்படிக்கையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| செய்வதற்காக ரூபா 11,107,000 உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அதற்கான கொடுப்பனவு அல்லது கணனி இயந்திரங்கள் பெறப்படாதிருக்கும் போது நிதிக்கூற்றுக்களில் செலவின மற்றும் பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்வதற்கு கடப்பாடுடையதாக இருந்தமையால் அது பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. என்னும் சொத்தொன்றாக கணக்கீடு செய்யப்படவில்லை. |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதிவரையில் வேலை பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற பெறுமதி ரூபா 33,252,714 ஆன 04 கட்டிடங்கள் மூலதனமாக்கப்படாமல் நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சுரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் மூலதனமாக்கப்பட்ட கட்டிடத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 49,703,791 ஆன செலவினம் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசு வெளிப்பாய்ச்சலின் கீழ் ஆதனங்களை கொள்வனவு செய்தலாக காண்பிக்கப்பட்ட போதிலும் அப்பெறுமதி நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | காசுப்பாய்ச்சல் கூற்றில் காசுப்பாய்ச்சல் சரியாக இனங்கண்டு காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது நீதிமன்ற தண்டப்பணப் பெறுவனவுகள் ரூபா 1,908,000 கெப்பக்கரு மாபிய முறைமை ஊடாக பங்களிப்பு பெறுவனவாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் மணல் கரையில் குவிக்கும் அனுமதிக் கட்டண பெறுவனவு ரூபா 9,457,100 யானை நிழல் வசதி கட்டணம் பெறுவனவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வலயங்களில் இருந்து பெறப்பட்ட தண்டப்பண அறிக்கைகளை நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடும் போது 02 வழக்குகளுக்குரிய பெறவேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 130,000 அதிகரித்தும், 05 வழக்குகளுக்காக கிடைக்க வேண்டிய நீதி மன்ற தண்டப் பணம் ரூபா 333,000 குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் தென் வலயத்தில் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் கணிப்பிடும் போது 09 வழக்குகளுக்குரிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 275,000 இரு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | நீதிமன்ற தண்டப்பணம் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 104(1) | நட்டம் ஒன்று அல்லது இழப்பு ஒன்று ஏற்படுமாயின் உடனடியாக அந்த அளவு மற்றும் காரணம் குறிப்பாக இனங்காண்பதற்கும் அதற்கு பொறுப்பு வாய்ந்தவரை தீர்மானிப்பதற்காக பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற 9,188 யானை பட்டாசுகள் அதாவது அண்ணளவாக ரூபா 800,372 அளவிலான யானை பட்டாசுகளின் பற்றாக்குறை தொடர்பாக அவ்வாறான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த யானைப் பட்டாசுகளின் பற்றாக்குறை 2010 ஆம் ஆண்டு ஏற்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது கிழக்கு வலயத்தில் மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது சில வலயங்களிலும் யானைப் பட்டாசு தொடர்பான புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அந்த புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 625(3) | பிரதான பங்களிப்பாளரால் நேரடியாக நிதி அனுப்பி பெறுகின்ற திணைக்களம் அந்தப் பெறுவனவுகளை திறைசேரியில் வைப்பிடல் வேண்டும். அவ்வாறான மானியங்களை பயன்பாட்டுக்கு எடுப்பதற்காக மதிப்பீடுகளில் நிதி எற்பாடு ஒதுக்கப்படும் இடத்து திணைக்களத்தால் உரிய மானிய நிதி ஏற்பாட்டை நிதியத்திற்கு ஒதுக்கிக் கொள்வதற்காக வெளிநாட்டு வள பணிப்பாளர் நாயகத்தின் மூலம் அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு கோரிக்கை இடப்பட்டு அது எவ்வாறான அல்லது பொறுப்புக்களில் உள்ளடக்கி கொள்வதற்கு முன்னர் பெறப்படல் வேண்டும். எனினும் வெளிநாட்டு நபரினால் நன்கொடையாக நேரடியாக திணைக்களத்தின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 10,079,912 தொகை நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளை பின்பற்றாமல் வன விலங்குகள் பாதுகாப்பு நிதியத்தின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வன விலங்குகள் பாதுகாப்பு நிதியத்திற்கு உரியதாக விநியோகிக்கப்பட்ட 1966 நவம்பர் 29 ஆம் திகதிய 14830 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் ‘‘வனவிலங்குகள் பாதுகாப்பு நிதியத்திற்கு கிடைக்கின்ற சகல நன்கொடைகளும் நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டும்’’ என குறிப்பிடப்பட்டுள்ளமையால் நன்கொடைகள் நிதியத்தின் வருமானத்துக்கு எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அந்த வர்த்தமானி பத்திரம் மற்றும் 2003.06.23 ஆம் திகதிய 1294/1 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் நன்கொடைகள் நிதியத்தின் செலவினமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | 2.14.1 ஆம் பிரிவு (35 மேலதிகம்) | திணைக்கள பெறுகைகள் குழுவின் மூலம் சந்தை விலை ஒப்பீட்டு முறையை பின்பற்றி பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்ய முடியுமானது ரூபா 10 மில்லியன் வரை மாத்திரமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக 2021 ஆம் ஆண்டின் போது சந்தை விலை ஒப்பீட்டு முறையை பின்பற்றி ரூபா 17,656,200 பெறுமதியான கணணி இயந்திரங்கள் | சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்ய முடியுமாக இருந்தமை கேள்வி கோருவதற்கு ஆகக் குறைந்தது 07 நாள் காலம் வழங்கப்பட்டு ரூபா 10 மில்லியனின் கீழ் ஆக இருந்த | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொள்வனவு மேற்கொள்ளப் பட்டிருந்தது. | போதிலும் ரூபா 17,656,200 பெறுமதியான கணணி இயந்திரங்களை கொள்வனவு செய்தல் கேள்வி கோருவதற்கு 16 நாள் காலம் வழங்கப்பட்டு இலங்கை டெலிகொம் தேசிய தொலைபேசி விளம்பரப் பக்கத்தில் குறிப்பிடப்பட்ட உள்நாட்டு முகவர் நிறுவனத்தில் இருந்து வரையறுக்கப்பட்ட போட்டியாளர் கேள்வி கோருவதன் கீழ் இருந்ததை குறிப்பிடுகின்றோம். | |
| | (ii) 4.2.2 ஆம் பிரிவு | பெறுகைகள் ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் முதல் முடியும் வரை ஒவ்வொரு பெறுகை செயற்பாடுகளினதும் படிமுறைகள் ஒழுங்கு முறையாக விபரிக்கும் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டிற்காக யானை பட்டாசுகள் கொள்வனவு செய்யும் பெறுகையின் போது அவ்வாறே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதன் பின்னர் அவ்வாறான குறைபடுகளை தவிரப்பதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | 2019 யூன் 13 ஆம் திகதிய 01/2018(i) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றிக்கையின் 03 ஆம் பந்தி | சகல அரசாங்க நிறுவனத்தினாலும் வழங்கப்படுகின்ற பல்வேறு சேவைகளுக்காக தற்போது அறவிடப்படுகின்ற கட்டணம் 15 சதவீதத்தினால் உயர்த்த வேண்டியிருந்த போதிலும் 2006 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1433/4 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் தேசிய ஒதுக்கப் பிரதேசம் அல்லது புனித பூமியில் அமைந்துள்ள நீர்த்தேக்கத்தில் மீன் பிடித்தலுக்கு | 2019 யூன் 13 ஆம் திகதிய 01/2018(i) ஆம் இலக்க சுற்றிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் 2006 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1433/4 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரத்தை திருத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பயன்படுத்தப்படுகின்ற மீன்பிடி படகுக்காக அறவிடப்படுகின்ற ரூபா 250 தொகையான அனுமதிப் பத்திர கட்டணம் மீளாய்வாண்டு வரையிலும் திருத்தப்பட்டிருக்க வில்லை. | தயவுடன் அறியத்தருகின்றோம் . | |
| (ஈ) | 2002 பெப்ரவரி 11 ஆம் திகதிய 16/2002 ஆம் இலக்க திணைக்கள சுற்றறிக்கையின் 01.1 மற்றும் 01.2 ஆம் பந்திகள் | தேசிய பூங்காக்களின் நுழைவுச்சீட்டு வருமானத்தை அறவிடுகின்ற சேவைக் கட்டணம் பதவியணியினர்களுக்கு இடையே பகிர்ந்தளிக்கும் போது சம்பளமற்ற விடுமுறை நாட்கள் 01 முதல் 10 நாட்கள் வரை பெற்றவர்களிடமிருந்து 10 சதவீதம் மற்றும் 11 நாட்களுக்கு மேல் சம்பளமற்ற விடுமுறை பெற்றவர்களிடம் இருந்து 50 சதவீதம் ஆக அறவிடப்படுகின்ற சேவைக் கட்டணமான வன விலங்குகள் பாதுகாப்பு நிதியத்துக்கு மீண்டும் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 14 உத்தியோகத்தர்களிடமிருந்து கழிக்கப்பட்ட ரூபா 1,829,200 தொகையை செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம் . | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 710,716,620 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 282,296,192 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 993,012,811 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நிதியத்தின் வருமானக் கூறான பூங்கா நுழைவுக் கட்டணம் ரூபா 366,162,825 இனாலும், சேவைக் கட்டணங்கள் ரூபா 51,717,049 இனாலும் மற்றும் பூங்காக்களில் வாகன உள்நுழைவுக் கட்டணம் ரூபா 7,892,657 இனாலும் வீழ்ச்சியடைந்தமையும், செலவினக் கூறான பராமரிப்பு, ஊழியர், உணவு, படி ரூபா 31,167,869.39 இனால் அதிகரித்தமையும், 2021 ஆம் ஆண்டில் புதிய செலவினமாக பூங்காக்களில் சுற்றுலா பயணிகள் மற்றும் மிருகங்களின் வசதிகளை அபிவிருத்தி செய்தல், பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான உபகரணங்கள், அலுவலக உபகரணங்களுக்காக ரூபா 26,014,721 செலவினம் செய்யப்பட்டமையும் பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| யானை மனித பிரச்சினைகளை குறைப்பதற்காக யானையை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் ரூபா 862 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் கொங்கிரீட் தூண்கள் இடப்பட்டு யானை வேலி நிர்மாணிப்பதற்கு 2020 ஏப்ரல் 30 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் அந்த நிர்மாண நடவடிக்கைகள் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்துக்கு கையளிக்கப்பட்டிருந்தது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் காரணமாக யானை வேலிக்கு பதிலாக ரூபா 304 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தில் யானை அகழியை வெட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (அ) அகழி வெட்டுவதற்காக உரித்தற்ற கட்டிட நிர்மாண விலை வீதத்தை அடிப்படையாக கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டதன் காரணமாக நீர்ப்பாசன விலை வீதத்துடன் ஒப்பிடும் போது ஒரு கன மீட்டர் ரூபா 312 இனால் மதிப்பீடு அதிகரித்திருந்ததுடன் பொறியியளாலர் மதிப்பீடு ரூபா 49,534,056 இனால் அதிகரித்து மேற் கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒரு கனமீட்டர் ரூபா 91,278.09 இற்காக குறித்துரைத்த கிரயத்தை விட ரூபா 28,478,736 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | விலை தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானம் தனிநபர் தீர்மானமாக இல்லாதிருந்ததுடன் அமைச்சு செயலாளர் மற்றும் வன சீவராசிகள் பணிப்பாளர் நாயகத்தை உள்ளடக்கிய குழு வொன்றின் மூலம் கலந்துரையாடப்பட்டு எடுக்கப்பட்ட தீர்மானமாகும் என அறியத்தருகின்றோம். | குறித்துரைத்த விலை வீதத்தை பயன்படுத்தி மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வெட்டப்பட்ட அகழி பௌதீக பிசோதனையின் போது அண்ணளவாக 3000 கனமீட்டர் மண்ணினால் குவிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மண்ணை அகற்றுவதற்காக ரூபா 1,497,000 அளவில் செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் நில முரண்பாடுகளை கவனத்தில் கொள்ளாது மண் வெட்டியதன் காரணமாக இவ்வாறு குவிக்கப்படுகின்ற மண் மீண்டும் அகற்றுவதற்கு வருடத்துக்கு அண்ணளவாக ரூபா 25,663,024 தொகை செலவு செய்வதற்கு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது | மண் படை குறைவான இடமாக இருந்ததுடன் அதில் இணங்காணப்பட்டிருந்த இடங்களில் நீர் வழிந்து செல்லும் இடமாக இருந்தது. அந்த நீர் வழிந்து செல்லும் முறையாக மேற்கொள்ளல் கால்வாய் உடைந்து விழுவதை தவிர்ப்பதற்கு முடியுமான ஆரம்ப கட்டத்தில் இது தயாரிக்கப்பட்டிருந்த போதும் அதற்கு பயன்படுத்தப்பட்ட தீர்வின் பிரகாரம் மீண்டும் மீண்டும் அது மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | யானை அகழி வெட்டும் போது நில முரண்பாடுகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளல் வேண்டும். |
| (இ) | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் யானை வேலி நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்து ரூபா 3,792,458 செலவிடப்பட்டிருக்கும் போது அகழி நிர்மாணத்துக்குரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினர் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக யானை வேலிக்காக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினமாக இருந்தது. | தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தினால் அதுவரை பௌதீக ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவற்றை எதிர்காலத்தில் நிர்மாணிப்பதாயின் அதற்காக பயன்படுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | யானை மனித பிரச்சினைகளை குறைப்பதற்காக திட்டங்களுடன் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | யானை வேலி நிர்மாணிப்பதற்காக புகையிரத திணைக்களத்தில் இருந்து பொருட்களை பெற்றுக் கொள்ளல் தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்த துடன் யானை வேலி நிர்மாணிப்பதற்காக | இந்தப் பொருட்கள் உத்தேசிக்கப்பட்ட அகழி நிர்மாணத்திற்காக ஈடுபடுத்தப்படும் வரை அத்திடிய பாதுகாப்பு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. | யானை வேலி நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் ஆகக் கூடிய வகையில் பயனுள்ளதாக பயனைப்பெறும் வகையில் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்ட ரூபா 800,000 ஆன 05 இரும்பு தட்டுக்கள் மற்றும் ரூபா 43,500 பெறுமதியான யானை பதாதைகள் அத்திடிய பாதுகாப்பு அலுவலகத்தில் பயனற்று காணப்பட்டது. | | |
| (உ) | யானை அகழி வெட்டும் செயற்திட்டம் 2021 யூன் 03 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 50 சதவீதமாக இருந்தது. | திட்டங்களை பல சந்தர்ப்பங்களில் திருத்துவதற்கு சில காலம் எடுத்தமையினால் குறித்துரைத்த கால அட்டவணையில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. அது ஒப்பந்தகாரரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டு ஏற்பட்டமையினால் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் யானை அகழியை நிர்மாணித்து பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 1982 இன் 41 ஆம் இலக்க வன விலங்குகள் மற்றும் தாவர பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 469 ஆம் அதிகாரத்தின் (6)(1)(ஈ) பிரிவின் பிகாரம் தேசிய பூங்காவில் ஏதாவது மரமொன்றை வெட்டுதல், பட்டை கழற்றுதல், உராய்தல், கட்டுதல், கிழித்தல் அல்லது வேறு ஏதாவது முறையில் பாதிப்பை ஏற்படுத்துதல் அல்லது அதனை அழித்தல் தவிர்க்கப்படல் வேண்டும். எனினும் யானை வேலி நிர்மாணிக்கும் போது மரங்களில் கனிசமான அளவு அகற்றப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக ஆய்வு செய்து அகற்றப்பட வேண்டிய மரங்களின் அளவை இனங்கண்டு அவற்றை அகற்றுவதற்கு தேவையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | உத்தேசிக்கப்பட்ட லுணுகம்வெஹர யானை தரித்தல் நிலையத்தில் அகழி வெட்டுவதற்கு முன்னர் வலுவான மின்சார வேலி நிர்மாணிப்பதற்காக இனங்காணப்பட்ட மின்சார வேலி வழியை சுத்தம் செய்யும் போது மரங்களுக்கு ஆகக் குறைந்த இழப்பு ஏற்படும் வகையில் சிறிய காட்டு மரங்களுடனான நிலத்தின் நடுவே மின்சார வேலி வழி சுத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த வீதியில் அகழி வெட்டும் போது கனிசமான மரங்கள் அகற்றப்படாதிருந்தமையையும் குறிப்பிடுகின்றோம். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23(ப) பிரிவில் திருத்தப்பட்ட 1995 பெப்ரவரி 16 ஆம் திகதிய இலக்கம் 859/14 | அகழி வெட்டுவதற்கு முன்னர் மின்சார வேலி நிர்மாணிப்பதற்காக சுற்றாடலுக்கு ஆகக் குறைந்த இழப்பு ஏற்படும் வகையில் மின்சார வேலி வழியை | சட்டத்தின் பிரகாரம் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | என்ற வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒதுக்கப் பிரதேசததில் வெளிசாக்குதல் மற்றும் செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு முன் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை ஒன்று பெறப்பட வேண்டியிருந்த போதிலும் இது தொடர்பாக சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. | சுத்தப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக அகழி வெட்டுவதற்கு சுற்றாடல் மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படாதிருந்தமையை குறிப்பிடுகின்றோம். | வேண்டியிருந்ததுடன் யானை வேலிக்குரிய சுற்றாடல் அறிக்கை யானை அகழிக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். |
| (ஏ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 137(5) இன் பிரகாரம் வழங்கல் தொடர்பான சந்தர்ப்பங்களின் போது அவற்றைப் பரீட்சித்து சரியானதாக கையேற்கப்பட்டமையை கொடுப்பனவை அங்கீகரிக்கும் உத்தியோகத்தர் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். யானை வேலி நிர்மாணிப்பதற்காக புகையிரத தண்டவாளங்களில் 4,333 பகுதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 15,815,099 தொகை பொருட்கள் கிடைப்பதற்கு முன்னர் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2022 ஏப்ரல் வரையிலும் 660 புகையிரத பீலி பகுதிகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. | இந்த புகையிரத பீலி வெட்டுதல், ஏற்றுதல், புகையிரதத்தின் மூலம் போக்குவரத்து செய்தல் புகையிரத திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டமையால் செலவிப்பட்ட செலவினங்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் புகையிரத பீலி பகுதிகள் மாத்திரம் பெறப்பட்டிருந்ததுடன் மிகுதி பகுதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 இன் 22 ஆம் இலக்க வன விலங்குகள் மற்றும் தாவர பாதுகாப்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின் II ஆம் அட்டவணையில் உள்ளடக்கப்படுகின்ற கடுமையாக பாதுகாக்கப்பட வேண்டிய பாலூட்டி | இழப்பீட்டை மீளளிப்பு செய்வதற்காக குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | இந்த பணத்தை மீளளிப்பு செய்வதற்கும் முறையான பிரகாரம் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

உயிரினங்கள் மற்றும் ஊர்வன வகைக்குரிய ஆமைகள், திமிலங்கள் மற்றும் டொல்பின் என 439 உயிரினங்கள் பேர்ல் எக்ஸ்பிரஸ்வே கப்பல் தீ பிடித்ததன் காரணமாக மரணமடைந்திருந்தது. மரணமடைந்த உயிரினங்களைக் கண்டறிந்து பரிசோதனை செய்வதற்காக திணைக்களத்தால் ரூபா 2,378,249 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த பணத்தை மீளளிப்பு செய்வதற்கு 2022 ஏப்ரல் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த பணம் கிடைக்க வேண்டிய பணமாக நிதியத்தின் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட 03 பணிகளுக்காக ரூபா 2,535,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவை அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை செயலாளரின் 2021 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 21/1596/304/134 ஆம் இலக்க கடிதத்தன் மூலம் அறிவிக்கப்பட்ட பிரகாரம் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை, அவசர தேவைக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதிலும் அவ்வாறான தேவை ஒன்று காணப்படாதிருந்ததன் காரணமாகும். | செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட பணிகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட 06 செயற்திட்டங்களுக்காக ரூபா 28,786,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பணிகளின் பேளதிக செயல் முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | எதிர்காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட பணிகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |